# உ.வே.சாமிநாதஐயரின் புலப்பாட்டு ஆளுமை

*ம. க. துர்காதேவி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
மதுரை காந்தி என்.எம்.ஆர். சுப்பராமன் மகளிர் கல்லூரி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6464

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகிய இரு நூற்றாண்டுகளில் ஏறக்குறைய சரிபாதி ஆண்டுகளைக் கடந்து வாழ்ந்து வந்தவர் டாக்டர் உ.வே. சாமிநாதஐயர். அவர் பதிப்பு துறையில் மட்டுமின்றி உரைநடையிலும் தனது பங்களிப்பைச் செய்துள்ளார். என் சரித்திரம், மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம், நான் கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி உள்ளிட்ட பல்வேறு உரைநடை நூல்களைப் படைத்து உரைநடை வளர்ச்சியில் தன் பங்களிப்பைச் செய்துள்ளார். உ.வே.சா.வின் இத்தகைய நூல்களின் வாயிலாக அவர்தம் புலப்பாட்டு நெறியை அறிய இயலும். ஆயினும் இத்தகு உரைநடை நூல்களுக்குச் சற்றும் குறைவில்லாத தரவுகளையும் நயங்களையும் கொண்டவை உ.வே.சா.வின் பதிப்பு மற்றும் படைப்பு முன்னுரைகள் என்றால் அது மிகையாகாது. சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்த போதிலும் அவற்றை உள்வாங்கிக் கொள்ளத் தேவையான தரவுகளை நவீன காலத்திற்கு ஏற்ற தெள்ளிய உரைநடையில் முன்னுரைகளின் வாயிலாக வழங்கியவர் உ.வே.சா. அவ்வகையில் தாம் பதிப்பித்த மற்றும் படைத்த நூலின் இயல்பு, தன்மை, நயம், பொருட்சுருக்கம் உள்ளிட்ட பல்வேறு தரவுகள் குறித்துப் பிறருக்குப் புலப்படுத்தப் பயன்படுத்திக்கொண்ட கருவியே அவர்தம் முன்னுரைகள் ஆகும். கூற வந்த கருத்தினைச் சரியான முறையில் உரையின் வாயிலாக பிறருக்கு எடுத்துக்கூறிப் புலப்படுத்துதல் என்பது ஒரு ஆற்றல் வாய்ந்த கலையாகும்.

படைப்பாளர் ஒருவரின் சிந்தனைத் திறன், நடை நயம் உள்ளிட்ட ஆளுமைக் கூறுகள் அவர்தம் உரைநடையில் புலப்பட்டு, புலப்பாட்டு ஆளுமையாக ஆக்கம் பெறுகின்றது. அவ்வகையில் உ.வே.சா.வின் முன்னுரைகளை ஆதாரமாகக் கொண்டு அவர்தம் புலப்பாட்டு உத்தி முறைகளை ஆராய்வதன் மூலமாக அவர்தம் புலப்பாட்டு ஆளுமையைப் புலப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**புலப்பாட்டு நெறியின் கோட்பாடுகளும் விளக்கங்களும்**

ஒரு மொழியை முறையுடன் பேசவும் எழுதவும் துணை செய்யும் கோட்பாடுகளைக் குறிக்கும் ~Rhetoric| என்னும் கிரேக்கச் சொல் தமிழில் "புலப்பாட்டு நெறி' என்று அழைக்கப்படுகிறது. சொல்லாட்சிக் கலை என்னும் பொருளில் இச்சொல் வழங்கப்படுகிறது. இக்கருத்து குறித்து விளக்கும் பேரறிஞர் கதிர்.மகாதேவன் அவர்கள் "மேலைநாட்டில் உரைநடை செப்பம் குறித்துப் பல்வகைக் கோணங்களில் ஆராயப்படுகின்றன. ஆங்கிலத்தில் புலப்பாட்டு நெறி (Rhetoric) மொழியைத் திறம்படக் கையாளும் கலைத்திறம் பற்றி விளக்குகிறது எனலாம்." என்றவாறு குறிப்பிட்டுள்ளார். அரிஸ்டாடில் "புலப்பாட்டு நெறி' என்னும் நூலைப் படைத்துப் புலப்பாடு குறித்த பல்வேறு கருத்துக்களை முன் வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. நா.உசாதேவி அவர்கள் தம்நூலில் "புலப்பாட்டு நெறி என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் கேட்போரின் மனதில் பேசுவோன் தன் கருத்தைப் பதிய வைக்கும் முயற்சியைக் கண்டறியும் நெறியாகும். பேச்சுக் கலைக்கும், கட்டுரைக் கலைக்கும் இந்நெறி தேவையாகும். இலக்கியத் திறனாய்வுக்கும் இந்நெறி இன்று உதவுகிறது. ஒரு குறிப்பிட்ட அறிஞரின் மொழி ஆளுந்திறமையையும், கலைபயில் தெளிவையும், பட்டறிவையும், தனித்திறனையும் அவர் கருத்துகளைப் புலப்படுத்தும் உத்திமுறைகளால் உணரலாம்." என்றவாறு குறிப்பிட்டிருப்பதன் மூலம் படைப்பாளன் ஒருவனின் படைப்பில் காணலாகும் புலப்பாட்டு உத்திகளை ஆராயும்போது அவர்தம் தனித்திறன், மொழியியல் புலமை உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகள் வெளிப்படும் என்பதை அறிய முடிகிறது.

**"சொல் நோக்கும் பொருள் நோக்கும்**
**தொடை நோக்கும் நடை நோக்கும்**
**எந்நோக்கும் காண இலக்கியம் ஆவது"**

எனப் பிள்ளை பெருமாள் ஐயங்காரின் நடை இயல்பைத் திருவரங்கக் கலம்பகத்தின் சிறப்புப் பாயிரச் செய்யுள் பாராட்டி உரைப்பதைப் போல ஒரு உரைநடையில் சொல் நயம், பொருள் நயம், தொடை நயம், நடை நயம் என அனைத்தும் இயைந்து செல்ல வேண்டும். அவ்வகையில் உ.வே.சா. தொடை நயங்கள், அணி நயங்கள், ஒப்பிட்டுக் கூறல், அடுக்குத்தொடர் உள்ளிட்ட பல்வேறு புலப்பாட்டு உத்தி முறைகளைத் தன் முன்னுரைகளில் கையாண்டுள்ளார். அவற்றுள் குறிப்பிட்ட சில புலப்பாட்டு உத்தி முறைகளை மட்டும் நாம் இவ்விடம் நோக்குவோம்.

**தொடை நயம்**

உ.வே.சா. தன் முன்னுரையில் எதுகை, மோனை, இயைபு, முரண் உள்ளிட்ட தொடைநயங்களையும் அமைத்து எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. செய்யுள் இயற்றும் ஆற்றல் உடைய உ.வே.சா.வின் உரைநடைப் பகுதிகள் சில செய்யுள் நடை போன்றே தொடை நயங்களும் புணர்ச்சி விதிகள் மிகுந்தும் காணப்படுகின்றன. சான்றாகப் புறநானூற்று நூலின் உள்ளடக்கம் குறித்து விளக்குமிடத்தில், "முன்னா ளிடையே யிந்நா டாண்ட, காவலர் பல்லோர் பாவலர் பல்லோர், மாசரிதத்தை யாசற விளக்கிச், சொற்சுவை பொருட்சுவை துவன்றியெஞ் ஞான்று, மொப்புமை யில்லாத் திப்பிய நடையுடைத், திறப்பா டமைந்தவிப் புறப்பாட் டுக்கள்," (சாமிநாதம் ப.125 ) என்னும் இப்பகுதியில் எதுகை, மோனை, இயைபு உள்ளிட்டத் தொடை நயங்கள் ஒருங்கே அமைந்துள்ளதைக் காணலாம்.

**உவமை நயம்**

அணிகளில் தாயணியாகப் போற்றப்படுவது உவமையணி ஆகும். அவ்வகையில் பொருள் புலப்பாடு சுவையாகவும் எளிமையாகவும் நடைபெற உவமை பயன்படுகிறது. உவமை

எல்லா இலக்கிய வகைகளுக்கும் பொருந்தும் என்பதை "அணிகளில் சிறந்ததாகவும், முதன்மையாகவும், எல்லா அணிகளுக்கும் அடிப்படையானதாகவும் அமைவது உவமை. இது எல்லா இலக்கியத்திற்கும் ஏற்றதும் உரியதுமான உத்தியாகும்."[4] என்றவாறு சா.வே.சுப்பிரமணியன் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமைப்படுத்தி நயம்பட உரைக்கும் வகையில் அமைந்த உவமையை உ.வே.சா. தன் முன்னுரைகளில் தேவையான இடங்களில் மட்டும் அளவோடு பயன்படுத்தியுள்ளார். சான்றாகத் திருக்காளத்திநாதருலா என்னும் நூலின் முன்னுரையில், அந்நூலின் ஆசிரியர் யார் என்பது குறித்த கருத்து வேறுபாட்டை நூல்களின் நடையொப்புமையைக் கொண்டு தெளிவுபடுத்துமிடத்தில், "கையெழுத்துப் பிரதிகள் ஒன்றன் தலைப்பில் மட்டும் இந்நூல் இரட்டையர் களியற்றிய தென்று எழுதப்பட்டிருந்தது சேறைக் கவிராச பிள்ளை இயற்றியதாகத் தக்க ஆதாரங்கள் கிடைத்தமையாலும் அவரியற்றிய வேறு உலாக்களுக்கும் இதற்கு முள்ள (பிம்பப் பிரதிபிம்பம் போன்ற) நடை யொற்றுமையாலும் இரட்டையர்களுடைய செய்யுணடைக்கும் இதற்குமுள்ள நடை வேறுபாட்டினாலும் இஃது இவர் இயற்றியதென்றே நிச்சயிக்கலாயிற்று" *(சாமிநாதம்.ப.630)* என்றவாறு தெளிவுபடுத்தியுள்ளார். இதில் ஒரே ஆசிரியரின் நடையொப்புமையைப் புலப்படுத்த "பிம்பப் பிரதிபிம்பம் போன்ற நடை" என்றவாறு உவமை நயம்பட புலப்படுத்தியுள்ளமை இவ்விடம் குறிப்பிடத்தக்கதாகும்.

**உருவகம்**

உ.வே.சா. நன்னூலுக்கான முன்னுரையில் உருவகங்களையும் பயன்படுத்தியுள்ளார். அதாவது உ.வே.சா. தன் முன்னுரைப் பகுதியில் ஆங்காங்கே அவர்தம் வாழ்க்கையில் நிகழ்ந்த சில வரலாற்றுக் குறிப்புகளையும் வழங்கிச் செல்வார். அவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் நன்னூல் பாடம் கேட்ட போது நிகழ்ந்த ஒரு வரலாற்றுக் குறிப்பைக் கூறுமிடத்தில் கருத்து வேறுபாடுடன் இருந்த இரு சார்புடைய மாணவர்களை நயத்துடன் இடித்துரைத்த சுப்பிரமணிய தேசிகர் குறித்தும் அம்மாணவர்களின் செயல்பாடு குறித்தும் விவரிக்கும் பகுதியில், "மாணாக்கர்கள் அவர்களுடைய (சுப்பிரமணிய தேசிகருடைய) முகமதியினின்றும் தோன்றிய வசனாமுதத்தை அருந்தி மிகுந்த சாந்தமுற்றுச் சென்று அவ்விருவரோடும் (கருத்து வேறுபாடுடைய இரு மாணவர்களோடும்) நட்புற்று மனம் கலந்து ஒழுகுவாராயினர்" *(சாமிநாதம்.பக்.399-400)* என்றவாறு எழுதியுள்ளார். இவ்விடத்தில் சுப்பிரமணிய தேசிகரின் மதி போன்ற முகத்தை முகமதி என்றும் அமுதன்ன வசனத்தை வசனாமுதம் என்றும் உவமைக்கும் பொருளுக்குமான வேறுபாடின்றி உருவகப்படக் கையாண்டுள்ளார்.

**அடுக்குத்தொடர்**

ஒரு கருத்தைப் படிப்போரின் மனதில் பதியவைக்கும் பொருட்டும் வலியுறுத்தி அழுத்தத்தோடு கூறும் பொருட்டும் படைப்பாளர்கள் அடுக்குத் தொடர்களைப் பயன்படுத்துகின்றனர். உ.வே.சா.வும் தன் முன்னுரைகளில் பல்வேறு இடங்களில் இத்தகு அடுக்குத் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளார். "இன்ன இன்ன", "சென்று சென்று", "சொல்ல சொல்ல", "மிக மிக" போன்ற பல்வேறு அடுக்குத் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளார். சான்றாக, வில்லைப் புராணத்தின் பதிப்பு முன்னுரையில் "வடமொழிப் புராணத்துக்கும் இத்தமிழ் புராணத்துக்கும் சில சில வேறுபாடுகள் உண்டு. வடமொழிப் புராணம் ஆறு அத்தியாயங்களையுடையது. இப்புராணத்தில் ஒன்பது சருக்கங்கள் உள்ளன" (சாமிநாதம்.

ப. 535) என்றவாறு "சில சில' என்னும் அடுக்குத் தொடரமைய எழுதியுள்ளமை சுட்டத்தக்கது.

## மேற்கோள் சான்றுகாட்டி விளக்குதல்

உ.வே.சா. தாம் கூறவந்த கருத்தினைப் பல்வேறு நூல்களில் காணலாகும் மேற்கோள்களை எடுத்தாண்டும் சான்று காட்டியும் விளக்கியுள்ளார். அதாவது அவர்தம் உள்ளத்து உணர்வுகளைப் புலப்படுத்துமிடத்தும் கூறவந்த கருத்தினை நிறுவுவதற்கும் கம்பராமாயணம், நீதிநெறி விளக்கம் உள்ளிட்ட பல்வேறு நூல்களிலிருந்து சில அடிகளைச் சான்று காட்டி விளக்கியுள்ளார். சான்றாகத் திருவிளையாடற் புராணத்தின் பதிப்பு முன்னுரையில் "திருவாலவாயென்பது, பாண்டி வள நாட்டில் உள்ள தேவாரம் பெற்ற பதினான்கு ஸ்தலங்களில் முதலாயது" (சாமிநாதம்.ப.469) என்றவாறு குறிப்பிட்டு, பின் 14 தலங்களைக் குறிக்கும் பாடலான,

**"கூடல் புன வாயில் குற்றால மாப்பனூ**
**ரேகநெல் வேலி யிராமேச - மாடானை**
**தென்பரங்குன் றஞ்சுழிய நென்றிருப்புத் தூர்கானை**
**வன்கொடுங்குன் றம்பூ வணம்"**
***(சாமிநாதம்.ப.469)***

என்றவாறு காளமேகப் புலவர் இயற்றிய மேற்கோள் பாடலைச் சான்று காட்டி விளக்கியுள்ளார். அதாவது திருவாலவாய் என்பதே பாடலில் கூடல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு இடங்களில் மேற்கோள் பாடல்களை எடுத்தாண்டு பொருளைப் புலப்படுத்துவது என்பது உ.வே.சா.வின் தனிச்சிறப்பு ஆகும். இத்தகு மேற்கோள் பாடல்கள் உ.வே.சா.வின் இலக்கியப் புலமைக்குச் சான்றுகளாக அமைகின்றன.

## ஒப்பிட்டு உரைத்தல்

ஒரு பொருளை அல்லது ஒரு கருத்தை மற்றொன்றோடு ஒப்பிட்டுக் கூறும்போது அவற்றின் தனித்தன்மை நன்கு புலனாகும். அவ்வகையில் கருத்துப் புலப்பாட்டை எளிமையாக்க உ.வே.சா. பல்வேறு இடங்களில் ஒப்பீட்டு முறையைக் கையாண்டுள்ளார். தமிழ்நெறி விளக்கம் என்னும் நூலுக்கான முன்னுரையில் தமிழ்நெறி விளக்கம் குறித்து விளக்குகையில்,

"தமிழ்நெறி விளக்க மென்பது, தமிழினது ஒழுகலாற்றை விளக்கும் விளக்கு போன்ற நூலென்னும் பொருளுடையது. இது அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்க மென்னும் இலக்கண நூற்பெயர்களையும், உண்மை விளக்கம், நீதிநெறி விளக்க மென்னும் இலக்கிய நூற்பெயர்களையும் போன்றது." (சாமிநாதம்.ப.417) என்றவாறு கூறவந்த நூல் பெயரோடு தொடர்புடைய வேறு நூல்களைக் கூறி ஒப்பிட்டு விளக்கியுள்ளார். இவை போன்ற பகுதிகள் உ.வே.சா.வின் ஒப்பீட்டு ஆளுமையைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளன.

## முடிவுரை

இக்கட்டுரையின் மூலம் உ.வே.சா.வின் முன்னுரைகளில் அவர்தம் நடை நயம், உள்ளிட்ட ஆளுமைக் கூறுகள் வெளிப்பட்டு அவர்தம் புலப்பாட்டு ஆளுமைக்குச் சான்றுகளாய் அமைந்துள்ளமை அறிய முடிகின்றது.

கிரேக்க நாட்டின் கோரஸ் முதலாக திதியாஸ், அரிஸ்டாடில் போன்றோர் புலப்பாட்டு நெறியை ஒரு கலையாக வளர்ச்சி பெறச் செய்தனர் என்பதை அறிய முடிகிறது.

படைப்பாளர் ஒருவரின் படைப்பில் அமைந்துள்ள தொடை நயம், அணிநயம் உள்ளிட்ட நடையியல் கூறுகளும், பல்வேறு உத்தி முறைகளும் அவர்தம் புலப்பாட்டு

ஆளுமைக்கு ஆதாரங்களாக அமைபவை என்பதை அறிய முடிகிறது. உ.வே.சா.வின் முன்னுரைகளில் எதுகை, மோனை, இயைபு உள்ளிட்ட தொடை நயங்களும் உவமை, உருவகம் உள்ளிட்ட அணிநயங்களும் அமைந்து அவர்தம் நயமிக்க நடை ஆளுமைக்குச் சான்று பகர்ந்து அமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

உ.வே.சா. பல்வேறு நூல்களிலிருந்து மேற்கோள் சான்றுகளைக் காட்டி தன் கருத்துக்களைப் புலப்படுத்தி இருப்பது அவர்தம் பன்னூற் புலமைக்குச் சான்றாகும். கருத்துப் புலப்பாட்டை எளிமையாக்கவும் ஒன்றன் தனித்தன்மையைப் புலப்படுத்தவும் உ.வே.சா. தன் முன்னுரைகளில் ஒப்பீட்டு முறையைக் கையாண்டுள்ளமை அவர்தம் ஒப்பீட்டுத் திறனுக்குச் சான்றாகி நிற்கின்றது என்பதை அறிய முடிகிறது.

## துணை நூற்பட்டியல்


1. ப.சரவணன் (தொகுப்பாசிரியர்) சாமிநாதம் (உ.வே.சா. முன்னுரைகள்), காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.,669 கே.பி.சாலை, நாகர்கோவில், முதல் பதிப்பு 2014.
2. உசாதேவி, நா., உ.வே.சாமிநாதையர் உரைநடை நூல்கள் உணர்த்தும் புலப்பாட்டு நெறி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, பதிப்பு 2000.
3. சுந்தரமூர்த்தி, இ., நடையியல் சிந்தனைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., அம்பத்தூர், சென்னை, பதிப்பு - 1994.
4. தெட்சிணாமூர்த்தி, பி., புலப்பாட்டு நெறி, இலஞ்சியார் பதிப்பகம், திருநெல்வேலி, 1984.
5. நீதிவாணன், ஜெ. நடையியல், முல்லை வெளியீடு, மதுரை, முதல் பதிப்பு - 1979.
6. இராமலிங்கம், மா., புதிய உரைநடை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு - 1980.